திரு. வெ. அரங்கராசன் : தலைவரவர்களே, அதைப் போல கூட்டுறவுச் சங்கங்களிலே கையாடல் செய்யும் தலைவர்கள் மீண்டும் பொறுப்பில் இருக்கக்கூடாது என்று அரசு நிபந்தனை விதிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, புதிய கூட்டுறவுச் சட்டத்திற்கான ஆய்வு நடைபெற்று வருகிறது. சட்டம் வரும்போது இதுபற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்தமாதிரியாக கூட்டுறவுச் சங்கங்களில் கையாடல்கள் நடைபெறுவதும், அதைக் கண்டுபிடித்து வழக்குத் தொடருவதில் தாமதம் ஏற்படுவதற்கும் காரணம் இரண்டு ஆண்டுகள் கழிந்துதான் தணிக்கை நடைபெறுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமல் இருக்க அந்த, அந்த ஆண்டிலேயே தணிக்கை செய்வதற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் கருத்தில் கொள்ளப்படும்.

சேவூரில் பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 813:—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அவினாசி யூனியன் சேவூரில் பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இல்லை.

கும்பக்கரையை சுற்றுலாத் தலமாக்கும் திட்டம்.

*வினா எண். 814:—திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் தாலுக்காவிலுள்ள கும்பக்கரையை சுற்றுலாத் தலமாக்கவும், பயணிகள் தங்குவதற்குக் குறைந்த வாடகையில் ஓய்வில்லங்கள் கட்டவும் செயற்குறிப்பு உள்ளதா?